Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 19/2021

Deposition of witness for: PW - 9

| | | | |
|---|---|---|---|
| Name | : **லோகநாதன்** | Father/Husband Name | : **தர்மலிங்கம்** |
| Age | : | Calling | : |
| Date | : 14.05.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 14 day of 05.2026.

( **சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது** ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் திரு.நடேசன் இறந்துவிட்டதனால், இவவ்ழக்கின் புலன்விசாரணை அதிகாரி திரு.நடேசன் அவர்களின் கையெழுத்தும், கையொப்பமும் எனக்கு நன்கு பரீட்சையம் என்பதாலும், நீதியின் நலன் கருதி வழக்கு கோப்பின் ஆவணங்களின் அடிப்படையில் நான் தற்போது கூடுதல் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 29.08.2020ம் தேதி 13.00 மணிக்கு சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.அப்துல்ரஹீம் சேட் என்பவர் நிலைய பொறுப்பில் இருந்தபோது பொன்னுச்சாமி மகன் முருகேசன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று புகாரின் தன்மைகேற்ப நிலைய குற்ற எண் 746/20, பிரிவுகள் 304(A) இதசன்கீழ் முதல தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். ( **அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ4ஆக குறியீடு செய்யப்படுகிறது** ).

பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். பின்னர் ஒரு நகலை புலன்விசாரணை அதிகாரி (மறைந்த) காவல் ஆய்வாளர் திரு.நடேசன் என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார்.

பின்னர் புலன்விசாரணை அதிகாரி காவல் ஆய்வாளர் திரு.நடேசன் அவர்கள் 29.08.2020ம் தேதி 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பெரியசாமி மற்றும் செல்வம் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். ( **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அசாஆ5மற்றும் அசாஆ6ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

பின்னர் காவல் ஆய்வாளர் அன்றைய தினம் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முருகேசன், அருண்குமார், ஈஸ்வரன், பார்வதி, நாகலெட்சுமி, பெரியசாமி, செல்வம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

இவ்வழக்கில் இறந்துபோன அழகேசன் என்பவரின் பிரேதத்தின்போது மேலூர் அரசுமருத்துவமனை சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கெண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். **(அந்த பிரேத விசாரணை அறிக்கை அசாஆ7 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

இவ்வழக்கில் இறந்த நபரின் இறப்பின் காரணம் குறித்து அறிய பிரேத கூராய்வு மேற்கொள்ள தலைமை காவலர் 1363 முருகேசன் என்பவர் மூலம் மருத்துவருக்கு வேண்டுகோள்கடிதம் கொடுத்து அனுப்பிவைத்துள்ளார். தலைமை காவலர் முருகேசன் மருத்துவருக்கு இறந்த நபரின் பிரேதத்தை

அடையாளம் காட்டி பிரேத கூராய்வு முடியும் வரை உதவியாக இருந்து பிரேத கூராய்வு பின்பு நல்லடக்கம் செய்ய பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளார்.

31.08.2020ம் தேதி காலை 11.00 மணிக்கு நிலையம் வந்து இவ்வழக்கில் விபத்து ஏற்படுத்திய வாகனத்துடன் நிலையத்தில் ஆஜரான எதிரி தர்மர் என்பவரை கைது செய்து தக்க இரு நபர் ஜாமீன் பெற்று நிலைய ஜாமீனில் விடுவித்துள்ளார். விபத்து ஏற்படுத்திய வாகனமான TN 21 AJ 0688 என்ற டிப்பர் லாரியை மோட்டார் வாகன ஆய்விற்கு மோட்டார் வாகன ஆய்வாளருக்கு அனுப்பிவைத்துள்ளார். அன்றையதினம் மேற்படி டிப்பர் லாரி உரிமையாளரான அஜ்மீர் காஜா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

14.09.2020ம் தேதியன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.அப்துல்ரஹீம் சேட் மற்றும் தலைமைகாவலர் முருகேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

07.10.2020ம் தேதி இவ்வழக்கில் விபத்துக்குள்ளான Hero HF Delexe TN CX DD80 என்ற இரு சக்கரவானத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பிவைத்துள்ளார். மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சரவணக்குமார் என்பவரை விசாரித்து TN 21 AJ 0688 என்ற டிப்பர் லாரி மற்றும் Hero HF Delexe TN CX DD80 என்ற இரு சக்கரவானம் ஆகியவற்றிற்கு மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(அந்த TN 21 AJ 0688 என்ற டிப்பர் லாரி மற்றும் Hero HF Delexe TN CX DD80 என்ற இரு சக்கரவானம் ஆகியவற்றிற்கு மோட்டார்**

**வாகன ஆய்வறிக்கைகள் முறையே அசாஆ 8 மற்றும் அசாஆ9 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

விபத்தில் இறந்தவருக்கு சடல கூராய்வு மேற்கொண்ட மேலூர் அரசு மருத்துவமனை மருத்துவர் திருமதி. அருணா அவர்களை விசாரித்து சடலக்கூராய்வு அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(அந்த சடல கூராய்வு ஆய்வறிக்கை அசாஆ10 ஆக குறீயிடு செய்யப்படுகிறது ).**

இத்துடன் தனது புலன்விசாரணை முடித்து எதிரி மீது பிரிவு 304(A) இதசன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி ஆஜர்**

**எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை**

பொதுவாக வாகன விபத்து ஏற்பட்ட இறந்தால் விபத்து நடந்த இடத்தில் IROAD மூலம் விசாரணை செய்யப்படும் என்றால் 2023ம் வருடத்திலிருந்து அந்த முறை பயன்படுத்தப்படுகிறது, இவ்வழக்கின் விபத்தானது 2020 ஆண்டு ஏற்பட்டுள்ளது. விபத்து நடந்த இடம் நான்கு வழிச்சாலையிலிருந்து 50 மீட்டர் துாரம்தான் இருக்கும் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்திற்கு 30 மீட்டர் முன்னரே வளைவு உள்ளது என்றால் சரிதான், பொதுவாக அந்த வளைவில் வாகனத்தை வேகமாக இயக்க இயலாது என்றால் சரியல்ல. அந்த இடம் நான்கு வழிச்சாலையிலிருந்து கொட்டாம்பட்டிக்குள் நுழையும் இடம் என்பதனால் அந்த நேரட்டில் வேகமாக செல்ல இயலாது, ஆனால் நான் வழக்கிற்காக வேகமாக செல்ல இயலும் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்திற்கு அருகே கடைகள் அதிகம் உள்ளது என்றால் சரிதான், ஆனால் விபத்து நடந்த காலகட்டம் கொரானா ஊரடங்கு அமலில் இருந்தது. கொரானா காலகட்டம்

என்பதனால் ஊரடங்கு அமலில் இருந்தபோது இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சிகள் விபத்து நடந்த கடைக்கு அருகே உள்ள கடைக்காரர்களை சாட்சிகளாக சேர்த்திருக்க இயலாது, புலன்விசாரணை அதிகாரி பார்வை மகஜர் சாட்சிகளிடம் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல.

2) இவ்வழக்கில் இறந்துபோன நபருக்கு ஒட்டுனர் உரிமம் உள்ளதா என்றால் எங்களிடம் ஒப்படைக்கவில்லை. விபத்தில் இறந்துபோன அழகேசன்தான் எதிரி இயக்கி வந்த டிப்பர் லாரி மீது மோதி தனக்கு தானே விபத்து ஏற்படுத்தியுள்ளார், இவ்வழக்கின் எதிரியிடம் அனைத்து ஆவணங்களும் உள்ளதனால் இறந்தவரின் குடும்பத்திற்கு இழப்பீடு பெற்றுத்தருவதற்காக உண்மை சம்பவத்தை மறைத்து எதிரி மீது பொய்யாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால்தான் விபத்து நடந்த இடத்திற்கு அருகே உள்ள கடைக்காரர்களை இவ்வழக்கில் நேரடி சாட்சியாக விசாரிக்காவில்லை, அவர்களை விசாரித்திருந்தால் இவ்வழக்கின் உண்மை தன்மை தெரிந்திருக்கும், வழக்கின் சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து இவ்வழக்கை தயார் செய்துள்ளார், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.